

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், அமைச்சர் இ.பெரியசாமி சிறப்பு உரையாற்றினார். உடன் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் மதுரை பாலா, சுபாஷினி உட்பட நிர்வாகிகள் உள்ளனர்.

## சொந்த வீடு இல்லாத அனைவருக்கும்

# இலவச வீட்டு மனைகள் வழங்கியது திராவிட மாடல் அரசு!

## சட்டப் பேரவையில் க.தேவராஜி பேச்சு!

சென்னை, ஏப். 8-

சட்டப்பேரவையில் வருவாய்த்துறை மான்யத்தில் ஜோலார்பேட்டை தொகுதி உறுப்பினர் க.தேவராஜி சொந்த வீடு இல்லாத அனைவரும் இலவச வீட்டு மனைகள் வழங்கியது திராவிடமாடல் அரசு என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

வருவாய்த்துறை மானியத்தில் ஜோலார்பேட்டை தொகுதி உறுப்பினர் க.தேவராஜி பேசியதாவது:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

எட்டு கோடி தமிழர்களின் இதயத் துடிப்பு, உலகத் தமிழர்களின் நம்பிக்கையாக, இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் தமிழ்நாட்டின் திட்டங்களைப் பின்பற்றும் வகையில், திட்டங்களினுடைய புகழ் இடமாக தமிழகத்தை மாற்றிக் கொண்டிருக்கும் வகையில் பெண்களுக்கு கட்டணமில்லாத பேருந்து சேவையும், புதுமைப் பெண் திட்டமும்,

உங்கள் தொகுதி முதலமைச்சர், மக்களைத் தேடி மருத்துவம் தமிழகத்தில் முதல் வேளாண்மை பட்ஜெட் அமைத்ததும், இல்லம் தேடி கல்வி, இன்னுயிர் காப்போம்நம்மை காக்கும் 48, நான் முதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டமும், பள்ளிகளில் காலை உணவுத் திட்டம், அரசு மகளிர் விடுதிகளையும் இப்படி மக்களுக்காக நவீன திட்டங்களை செயல்படுத்திக்கொண்டிருக்கிற, நவீன தமிழகத்தின் தந்தை. நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற, தேர்தலாக மாற்றியவர் எங்கள் தலைவரே! எம்மை ஆளும் முதல்வரே! உம்மை வணங்குகிறேன்.

தமிழ்நாட்டின் எதிர்காலம், இளைஞர்களின் துடிக்கும் எங்களின் இளம் சூரியனே, சுற்றிய இடம் எல்லாம் கைப்பற்றிய இடமாக எங்கள் இளைய தலைவர் அவர்களே, துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) போர்ப்படை தளபதி, கழகத்தின் தலைவர் தளபதி அவர்களையும், எதிலும் வல்லவர் என்று பாராட்டபடுபவர். தளபதியினுடைய ஆணைக்கு ஏற்று திருப்பத்தூர் மாவட்டத்தை திருப்புமுனை மாவட்டமாக மாற்றிக்கொண்ட எங்கள் மாவட்டத்தினுடைய அமைச்சர், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அவை முன்னவர், நீர்வளத் துறை அமைச்சர், கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும், கைத்தறி துறை அமைச்சர் அவர்களையும், வேளாண்மை துறை அமைச்சர் அவர்களையும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும், பேரவைத் தலைவர் அவர்களையும், அரசு தலைமை கொறடா அவர்களையும், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வணங்குகிறேன். எனக்கு வாக்களித்து வெற்றி பெற செய்த ஜோலார்பேட்டை தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலமாக மாநில நிர்வாகத்தின் முதுகெலும்பாக திகழும், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் செயல்பட்டு வருகிறது. திராவிட மாடல் அரசானது அனைத்து விதமான பேரிடர்களையும் திறம்பட எதிர்கொண்டு இந்தியாவிற்கே முன்மாதிரியாக திகழ்ந்து வருகிறது. மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு உதவிடும் வகையில், மாநிலத்தில் செயலாக்கக் குழு அமைத்த அரசு நம்முடைய தங்க தளபதி அரசு.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் வீடு இல்லாத ஏழைகள் அனைவருக்கும் வாழ்விடம் அமைத்து தரும் வகையில் இலவச வீட்டு மனைகள் வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்கிய அரசு நம்முடைய கழக அரசு.

ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் ஒதுக்கப்பட்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு epattaகள் வழங்கிய அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பெண்களின் நலனை உறுதி செய்யும் வகையிலும் குடும்பத்திலும் உள்ள பெண் உறுப்பினர் பெயரில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கிய அரசு நம்முடைய அரசு. பொதுமக்களின் நலன் கருதி பொதுமக்கள் இணையதளம் வாயிலாக மற்றும் பொது சேவை மையம் வாயிலாக எங்கிருந்து வேண்டுமானாலும் பட்டா மாறுதல் கோரி விண்ணப்பிக்கும் சேவை மையம் தொடங்கி வைத்த கழக அரசு, நம்முடைய தங்க தளபதி அரசு.



### ஏழைகளின் ஊட்டி ஏலகிரி மலை!

ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏலகிரி மலையில் சுமார் 10 ஆண்டு கால மக்களின் கோரிக்கையான அத்தனாவூரிலிருந்து, கோட்டூர் வழியாக பல்லக்கலனியூர், நிலாவூர், பாடனூர், புத்தூர், தாயலூர் வரை செல்லும் 10 கிலோ மீட்டர் ring road சாலையை ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை அறிவித்த திராவிட மாடல் முதல்வர் தளபதியார் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஜோலார்பேட்டை தொகுதி மக்களின் சார்பாகவும், திருப்பத்தூர் மாவட்ட மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகள். ரெட்டித்தோப்பு மேம்பாலங்களை அமைப்பது என அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும், திருப்பத்தூர் மாவட்ட கழகத்தின் சார்பாகவும் நன்றி கூறி நிறைவு செய்கிறோம்.

வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி மக்களினுடைய நீண்டநாள் கோரிக்கைகள். அம்பலூர், ராமநாயக்கன் பேட்டை இடையே, பாலாற்றின் குறுக்கே அணைகட்டு அமைக்கும் பணிகள் 29 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், ஜாப்ராபாத் அருகில், ஜாப்ராபாத் கிராமத்திலுள்ள பாலாற்றின் குறுக்கே அமைந்துள்ள தடுப்பணையினை புனரமைத்துத்தர மேற்கொள்ளும் பணிகளுக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டிலும், கொடையாஞ்சி பகுதியிலுள்ள பாலாற்றின் குறுக்கே தரையின் கீழே தடுப்புச் சுவர்களை புனரமைத்துத் தர ரூ.5 கோடியும், ஆண்டியப்பனூர் ஓடை குறுக்கே கால்வாய்களை சீரமைக்கும் பணிகளுக்கு ரூ.50 இலட்சமும் அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் வாணியம்பாடி தொகுதி மக்களின் சார்பாகவும், திருப்பத்தூர் மாவட்ட மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியின் கோரிக்கைகள், ஜோலார்பேட்டை தொகுதி, அக்ராகரம் பகுதியில் 41 ஏக்கர் புறம்போக்கு நிலம் உள்ளது. மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று சிட்கோ அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். புதுப்பேட்டையிலிருந்து கே.பந்தாரப்பள்ளி வழியாக தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் சாலையை அகலப்படுத்தி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பச்சூர் ஊராட்சியிலிருந்து கொத்தூர் வழியாக ஆந்திரா மாநிலம் எல்லை வரை செல்லும் சாலைகளை அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செட்டியப்பனூர் ஊராட்சியிலிருந்து கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை தேசிய நெடுஞ்சாலை சந்திப்பு சாலையை அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தாமலேரிமுத்தூர் பெருமாள் கோவில் முதல் சோமநாயக்கன்பேட்டை வழியாக நாட்றம்பள்ளி தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் நெடுஞ்சாலையை அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஜோலார்பேட்டை நகரத்தில் உள்ள குடியானகுப்பம் ஏரி, கோடியூர் ஏரியை தூர்வாரி ஆழப்படுத்தித் தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை நகரத்திலுள்ள ராமரெட்டியூர் பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருமாறு தங்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஜோலார்பேட்டையில் புதிய தீயணைப்பு துறை அலுவலகம் அமைத்துத் தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன். வாணியம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் கல்வி தரத்தை உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வக்கணம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 8 வகுப்பறை கொண்ட கட்டடம் கட்டித் தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! தமிழ்நாடு வெல்லும்! 2026ல் 200 இலக்கு என்பதை கழகத் தலைவர் அவர்கள் பாராட்டக்கூடிய வகையில் படைப்போம், படைப்போம், தளபதியினுடைய வரலாறு. வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் உரித்தாக்கி, நன்றி, நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

### தொகுதிக் கோரிக்கைகள்:

வெலக்கல்நத்தம் ஊராட்சி, கிட்டபையனூர் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளிக்கு 4 வகுப்பறை கொண்ட கட்டடம் கட்டித் தர வேண்டும்.

நெக்குந்தி ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கு 3 வகுப்பறை கொண்ட கட்டடம் கட்டித் தர வேண்டும்.

வாணியம்பாடி தொகுதியில் உள்ள கொத்தகோட்டை ஊராட்சி உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

ஏலகிரி மலை ஊராட்சி, அத்தனாவூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 3 வகுப்பறை கொண்ட கட்டடம் கட்டித் தர வேண்டும்.

சின்னமுக்கனூர் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 2 வகுப்பறை கொண்ட கட்டடம் கட்டித் கட்டித் தர வேண்டும்.

வேட்டப்பட்டு ஊராட்சியில் புதிய கால்நடை கிளை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

வெலக்கல்நத்தம் ஊராட்சியில் புதிய கால்நடை கிளை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

ஏலகிரி ஊராட்சியிலுள்ள ஏரியை தூர்வாரி ஆழப்படுத்தித் தர வேண்டும். திரியாலம் ஏரியை தூர்வாரி, கரையைப் பலப்படுத்தித் தர வேண்டும். செட்டேரி டேமை தூர்வாரி, ஆழப்படுத்தி, கரையைப் பலப்படுத்தித் தர வேண்டும்.

தாமலேரிமுத்தூர் ஊராட்சியில் உள்ள அருள்மிகு சாமுண்டீஸ்வரி திருக்கோயில் அருகில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டும். அச்சமங்கலம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

பொன்னேரி ஊராட்சியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 300 மீட்டர் சுற்றுச் சுவர் மற்றும் பேவர் பிளாக் அமைத்துத் தர வேண்டும்.

தாமலேரிமுத்தூர் ஊராட்சியிலுள்ள அருள்மிகு சாமுண்டீஸ்வரி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்து தர வேண்டும்.

வெலக்கல்நத்தம் ஊராட்சியில் உள்ள நந்திபெண்டா முருகர் கோவிலுக்கு குடமுழுக்கு செய்து தர வேண்டும். நாட்றம்பள்ளியிலுள்ள சாமுண்டீஸ்வரி கோயிலுக்கு குடமுழுக்கு செய்து தர வேண்டும்.

ஏலகிரி மலை ஊராட்சியில் உள்ள மலைவாழ் மக்களுக்கு இலவச பட்டா வழங்க வேண்டும்.

இவ்வாறு க.தேவராஜி பேசினார்.



வானூர் சட்டமன்றத் தொகுதி, வானூர் மேற்கு ஒன்றியம், இளையாண்டிப்பட்டு ஊராட்சியில் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் செ.புஷ்பராஜ், இரா.மைதிலி ராஜேந்திரன், மாரிமுத்து, திருவக்கரை பாஸ்கர், ஆர்.எஸ்.வாசன், வி.எம்.ஆர்.சிவா, அன்புமணி, ஒன்றிய நிர்வாகிகள் குப்பன், விஸ்வநாதன், வேலாயுதம், முருகன், மகேஷ், செந்தில்குமார், கிருஷ்ணன், தர்மசிவம், முத்துசாமி, ராஜேந்திரன், ஜெயகிருஷ்ணன், தாமோதரன், சேஷாத்திரி, ஜெயபிரதாபன், ரஞ்சித் குமார், சௌந்தரராஜன், நாராயணன், வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!




## தி.மு.க. மாணவர் அணி மண்டல வாரியாக

# மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!

மதுரை மாட்டுத்தாவணி சுற்றுச் சாலையில் அமைந்துள்ள "பாப்பீஸ் ஓட்டலில்" "மண்டல வாரியாக மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்" நாளை (09.04.2025) காலை 9.00 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் அதலை பி.செந்தில்குமார், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, ஜெ.ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில், தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, திருநெல்வேலி மாநகரம், தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்தஆய்வுக் கூட்டத்தில், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட, மாநகர மாணவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்துகொள்வதோடு, கூட்டத்திற்கு வரும் அமைப்பாளர்கள் தத்தமது அமைப்பின் நடவடிக்கைக் குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டுவர வேண்டும்.

அத்துடன், இதுவரை செய்த செயல்திட்டங்கள் குறித்த புகைப்படத் தொகுப்புகளை அவசியம் கொண்டுவர வேண்டும். அத்துடன் கல்லூரிகள் கட்டமைப்பின் தகவல்களையும் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.


`அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள்: 07.04.2025.

இரா. ராஜீவ்காந்தி
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இசைமுரசு நாகூர் அனிபா

### ஏப்ரல் 8 (2015)



தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் தமது காந்தர்வ இசையால் – 'கணீர்' குரலால் – "அழைக்கின்றார்... அழைக்கின்றார்... அண்ணா", "ஓடி வருகிறான்.. உதயசூரியன்", "கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!" போன்ற கருத்தாழமிகு பாடல்களால் கழகக் கொள்கைகளைப் பரப்பி வந்த தூய தொண்டர்.

1952–ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா நடத்திய கழகத்தின் முதல் மாநாடு தொடங்கி, அனைத்து மாநாடுகளிலும் இயக்கப் பாடல்களை பாடியவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற உயிரனைய தோழர்.

'இசைமுரசு' எனும் அடைமொழியால், அகிலத்தவரால் அன்பு தவழ அழைக்கப்பட்டவர்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கப்பட்டது.

முரசொலி அறக்கட்டளை சார்பில் 2011ஆம் ஆண்டுக்கான "கலைஞர் விருதும்", ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழியும் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டார்.

"தன்னுடைய பாடல்கள் மூலம் கழகத் தொண்டாற்றிய இசைமுரசு அனிபா மறைந்தாரே, அவர் புகழ் ஓங்குக!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.